செய்தி வெளியீடு :806 27.9.**2008**

## பத்திரிகை செய்தி

சில ஒப்பந்த ஊர்தி ஆம்னி பேரூந்துகளில் தொடர் விடுமுறை நாட்களின் போதும், திருவிழா காலங்களிலும் பண்டிகை நாட்களிலும் சென்னையிலிருந்து பிற ஊர்களுக்கும், பிற ஊர்களிலிருந்து சென்னைக்கும் கூடுதல் தேவையை பயன்படுத்தி சாதாரண நாட்களில் வசூலிக்கப்படும் கட்டணத்திற்கு மேல் கூடுதலாக வசூலிப்பது என்பது நடைமுறை வழக்கத்தில் இருந்து வந்தது. இதனை கருத்தில் கொண்டு இம்மாதிரியான ஒழுங்கீனத்தை கட்டுப்படுத்தும் பொருட்டும் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அபராதம் வசூலிப்பதோடு அல்லாமல் அனுமதி சீட்டுகளின் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் பல்வேறு கால கட்டங்களில் போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேபோன்று எதிர்வரும் சரஸ்வதி பூசை மற்றும் ஆயுத பூசை நாட்களை முன்னிட்டு வரும் விடுமுறை நாட்களில் வாகன உரிமையாளர்கள் அதிக கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கும் 12.10.2008 வரை சிறப்பு சோதனைகள் மேற்கொள்ள கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து தரப்பு பொதுமக்களும் இந்நடவடிக்கைக்கு தகுந்த ஒத்துழைப்பு நல்குமாறும் ஆம்னி பேரூந்துகளில் அதிக கட்டணம் வசூலிக்கும் இனங்களில் அவற்றைப் பற்றிய முழு விபரங்களை சம்பந்தப்பட்ட போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு புகார்கள்

தெரிவிக்கும்படியும் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதிகாரிகள் விபரம் மற்றும் தொலைபேசி எண்கள் பின்வருமாறு

| **வரிசை எண்.** | **ஆதிகாரிகளின் விவரங்கள்** | **தொலைபேசி எண்** |
|---|---|---|
| 1. | இணை போக்குவரத்து ஆணையர், சென்னை சரகம் | 044 26444445 |
| 2. | துணை போக்குவரத்து ஆணையர், விழுப்புரம் | 04146 223391 |
| 3. | துணை போக்குவரத்து ஆணையர், சேலம் | 0427 2448234 |
| 4. | துணை போக்குவரத்து ஆணையர், திருச்சி | 0431 2420712 |
| 5. | துணை போக்குவரத்து ஆணையர், கோவை | 0422 2244441 |
| 6. | துணை போக்குவரத்து ஆணையர், மதுரை | 0452 2530847 |
| 7. | துணை போக்குவரத்து ஆணையர், திருநெல்வேலி | 0462 2552548 |

இதே போன்று புகார்களை பொது புகார் தொலைபேசி எண். 100–க்கு தெரியப்படுத்தினால் காவல்துறை மூலமாக சம்மந்தப்பட்ட வாகன உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் கூடுதலாக கட்டணம் வசூலித்தல் போன்ற ஒழுங்கீனங்களில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு அனுமதி சீட்டு மீது நடவடிக்கை மற்றும் வாகனங்களை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் ஆம்னி பேரூந்து அனுமதிதாரர்கள் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

**ஒம்/– சி.பி. சிங்,**
**சிறப்பு ஆணையர் மற்றும் போக்குவரத்து ஆணையர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**